தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் - முன்னாள் முதல்வர்

சந்திரபாபு நாயுடு கைது - சட்ட விரோதம் என குற்றச்சாட்டு!

ஆந்திர மாநிலத்தில் பேருந்துகள் ஓடவில்லை - பதற்றம் நீடிப்பு!

திருமலை, செப். 11 -

ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திர பாபுநாயுடு நேற்று முன்தினம் அதிகாலை அதிரடியாக கைது செய்யப் பட்டார். இதனால் தெலுங்கு தேசம் கட் சியினர் பல இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து பதற்றம் நிலவு வதால், அங்கு பஸ்கள் நிறுத்தப்பட்டது.

ஆந்திர மாநிலத்தில் சந்திரபாபு நாயுடு முதல்வர் பதவியில் இருந்த போது 'சிமென்' என்ற நிறுவனத்துடன் இணைந்து ரூ.3,350 கோடியில் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் வகையில் கடந்த 2015ம் ஆண்டு திட்டம் அறிவிக்கப்பட் டது. இந்த திட்டத்தில் மிகப்பெரிய ஊழல் நடந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தது. இதையடுத்து கடந்த 2017ம் ஆண்டு ஜி.எஸ்.டி. வருவாய் புல னாய்வு அதிகாரிகள் புனேவில் உள்ள டிஜிட்டல் டெக் நிறுவனத்தில் சோதனை மேற்கொண்டனர். இதில் ரூ.241 கோடி போலி நிறுவனத்தில் முதலீடு செய்யப் பட்டு, ஹவாலா பணமாக சந்திரபாபு நாயுடுவிற்கு கைமாறியதாக தெரிய வந்தது.

இதில் வருமான வரித்துறை, அம லாக்க இயக்குனரகம், சி.பி.ஐ. விசா ரணை மேற்கொண்டு வந்தது. இந்த திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ததில் ரூ.300 கோடிக்கு மேல் ஊழல் நடந்தி ருப்பது தெரியவந்துள்ளது. மேலும் சிமென் நிறுவனத்தின் அப்போதைய நிர்வாக இயக்குனராக இருந்த சுமன் போஸ் மோசடி நடந்ததை ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் மோசடி பணம் எவ்வாறு கைமாறியது என விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந் தது. மேலும் கடந்த 2021ம் ஆண்டு டிசம்பர் 19ம் தேதி ஜெகன் மோகன்

தலைமையிலான மாநில அரசு சிறப்பு புலனாய்வு அமைப்பு ஏற்பாடு செய்தது. விசாரணையில் ஊழல் நடந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் சந்திரபாபுநாயுடு நந் தியாலாவில் சுற்றுப்பயணம் மேற் கொண்டு இருந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு ஆர்.கே.பங்ஷன் ஹாலில் தங்கினார். நேற்று அதி காலை 3 மணிக்கு சந்திரபாபுநாயுடு தூங்கிக்கொண்டு இருந்தபோது டி.ஐ.ஜி. ரகுராம் தலைமையிலான சி.ஐ.டி. அதிகாரிகள் மற்றும் போலீசார் அங்கு சென்றனர். அப்போது தெலுங்கு தேசம் கட்சியினரை அப்புறப்படுத்தி கேரவேனை தட்டி சந்திரபாபுநாயு டுவை எழுப்பி கைது செய்வதாக கூறி னர். மேலும் போலீசார் உரிய ஆவ ணங்களை காண்பித்து சந்திரபாபு நாயுடுவிடம் கைது செய்வதற்காக கையெழுத்து பெற்றனர். பின்னர் அதே இடத்தில் மருத்துவ குழுவினர் வரவழைக்கப்பட்டு சந்திரபாபுவுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள் ளப்பட்டது. பின்னர் காலை 6 மணிக்கு சந்திரபாபு நாயுடுவை கைது செய்த னர்.

தொடர்ந்து அவரை ஹெலிகாப்ட ரில் அழைத்து செல்ல ஏற்பாடு செய்யப் பட்டு இருந்தது. ஆனால் அவர் தனது காரில் வருவதாக கூறியதால் அவரது காரிலேயே பலத்த பாதுகாப்பிற்கு மத்தி யில் விஜயவாடாவில் உள்ள லஞ்ச ஒழிப்புத்துறை சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதேபோன்று சந்திரபாபுநாயுடு ஆட்சியில் கல்வித் துறை அமைச்சராக இருந்த கண்டா ஸ்ரீனிவாசையும் போலீசார் கைது செய் தனர். இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் அச்சம் நாயுடு பெயரும் இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே இந்த வழக்கில் 10 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் டிஜிட்டல் டெக் நிறுவனத்தின் ரூ.31 கோடியை அமலாக்கத்துறை முடக்கம் செய்துள்ளது.

ஏற்கனவே வருமானவரித்துறை இதே குற்றச்சாட்டில் ரூ.116 கோடி கணக்கில் வராமல் சந்திரபாபுநாயுடு விற்கு கைமாறியதாக நோட்டீஸ் அனுப்பி இருந்தது குறிப்பிடத்தக்கது. சந்திரபாபுநாயுடு கைது செய்யப்பட்ட தால் ஆந்திராவில் பதற்றம் ஏற்பட்டுள் ளது. பல இடங்களில் தெலுங்கு தேசம் கட்சியின் முக்கிய தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். அதையும் மீறி சிலர் சாலைகளில் வந்து ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டதோடு டயர்களை கொளுத்தி தங்கள் எதிர்ப்பை தெரி வித்து முதல்வருக்கு எதிராக கோஷங் களை எழுப்பினர். ஒரு சில இடங்களில் போலீசார் தடியடி நடத்தி போராட்டக்கா ரர்கள் கூட்டத்தை கலைத்தனர். மாநி லம் முழுவதும் முன்னெச்சரிக்கை நட வடிக்கையாக போலீசார் பேருந்து சேவையை நிறுத்தி வைத்தனர். இத னால் பல்வேறு ஊர்களுக்கு செல்ல இருந்த பயணிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். அதேபோல் பள்ளி, கல் லூரிகளுக்கு நேற்று விடுமுறை அளிக் கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

சட்டத்திற்கு விரோதமாக கைது!

இதையடுத்து நேற்று முன்தினம் மங்களகிரியில் உள்ள சி.ஐ.டி. அலுவல கத்தில் சந்திரபாபு நாயுடுவின் வழக் க்கறிஞர் முன்னிலையில் அவரிடம் விசாரணை நடத்தினர். இதையடுத்து நேற்று காலை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிஐடி போலீசார் மருத்துவ பரிசோதனை நடத்தினர். இதன்பின்னர் விஜயவாடாவில் உள்ள நீதிமன்றத்தில் அவரை சிஐடி போலீசார் ஆஜர்படுத்தினர். அங்கு தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. அப்போது சந்திரபாபு நாயுடு தரப்பில், தனக்கு எதிராக மாநில அரசு பொய் வழக்கு தொடுத்திருப்பதாகவும் கைது செய்தது சட்டத்திற்கு விரோதமானது என்றும் குற்றம் சாட்டி வாதிட்டனர்.

இதற்கிடையே, தொடர்ந்து பதற்றம் நீடிப்பதால் நெல்லூர் மாவட்டம் மற்றும் ராஜமுந்திரி பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்துமணி சிந்துமணி

அந்துமணி : ஏண்டி சிந்து; ஜி20 மாநாட்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துக்கு, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே அவர்களுக்கு அழைப்பு இல்லை என்பது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறதே ?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; **ஜனநாயக நாட்டில் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும், ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை.**

ஆளும் கட்சி எப்போதும் பெருந்தன்மையுடன் நடந்து, மரபுகளைப் பேண வேண்டும்.

ஒன்றிய பா.ஜ.க.விடம் உயர்ந்த பண்பாடுகளை ஒருபோதும் எதிர்பார்க்கக் கூடாது.

ஜனநாயகத்துக்குப் புறம்பானவற்றைச் செய்வதிலும்; 'சீப்பை ஒளித்து வைத்து, கல்யாணத்தை நிறுத்தி விடலாம்' என்று நினைப்பதிலும், ஒன்றிய பா.ஜ.க.வை விஞ்ச யாராலும் முடியாது !

ஒரே நாடு ஒரே தேர்தல் மூலம்

மாநில அரசுகளை பலவீனப்படுத்த பா.ஜ.க. திட்டம்!

ப.சிதம்பரம் குற்றச்சாட்டு!

காரைக்குடி, செப். 11 -

``இந்தியா கூட்டணிக்கு அகில இந்திய அளவில் தொகுதி பங்கீடு கிடை யாது. மாநில அளவில் தான் தொகுதி பங்கீடு. இந் தியா கூட்டணியில் 14 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு கூடி தேர்தல் வியூகங்களை வகுப்பார் கள்'' என முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

காரைக்குடியில் செய்தி யாளர்களை சந்தித்த அவர், "இந்தியா ஜனநாயகமும், எதிர்க்கட்சியும் இல்லாத நாடாக மாறிவிடுமோ

என்ற அச்சம் எழுகிறது. இந்தியா அல்லது பாரதம் என்பது மாநிலங்கள் அடங் கிய ஒன்றியம் என்று தான் அரசியல் சாசனத்தில் உள் ளது. இந்நிலையில் பாஜக வின் நோக்கம் என்ன வென்று புரியவில்லை.

ஜி 20 மாநாடு அழைப்பி தழில் ஆங்கிலத்தில் இந் தியா என்றும் ஹிந்தியில் பாரத் என்றும் எழுதலாம். நாங்கள் பாரதத்திற்கு விரோதி அல்ல. ஆனால் பா.ஜ.க. இந்தியாவை விரோதியாக பார்க்கிறது. ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதை செயல்படுத்த அரசியல் சாசனத்தில் குறைந்த பட்சம் 5 திருத்தங் களை செய்ய வேண்டும். மாநில அரசுகளை பலவீ னப்படுத்தவே ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற கோட் பாட்டை பா.ஜ.க. எடுத் துள்ளது.

எம்மதமும் சம்மதம் என்பதுதான் காங்கிரசின் கொள்கை. நாங்கள் சர்ச் சையில் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை. இந்தியா கூட்டணிக்கு அகில இந் திய அளவில் தொகுதி பங் கீடு கிடையாது. மாநில அளவில் தான் தொகுதி பங் கீடு. இந்தியா கூட்டணி யில் 14 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு கூடி தேர்தல் வியூகங்க ளை வகுப்பார்கள்.

வடநாட்டில் சனாதனம் என்பது இந்து மதம் தான். தமிழகத்தில் சனாதனம் என்பது ஜாதிய வாதம், பெண் இழிவு என்றும் வட நாட்டில் இந்து மதம் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. நாம் பேசுவது வேறு, அவர் கள் புரிந்து கொள்வதுவேறு. ஆதலால் சர்ச்சை ஏற்படுகி றது" என தெரிவித்தார்.

பெரும் ஆதரவு பெற்ற தலைவர்: வாக்கெடுப்பு!

இன்று இந்தியா முழுவதும் உள்ள
பிற்படுத்தப்பட்ட இந்துக்கள்
தங்களது நம்பிக்கை நட்சத்திரமாக
உதயநிதி ஸ்டாலின் அவர்களை கொண்டாடி வருகின்றனர்
இந்தியா முழுவதும் உதயநிதி ஸ்டாலின்
கட் அவுட்டுக்கு பாலாபிஷேகம் புஷ்பாஞ்சலி செய்து வருகின்றனர்
வட இந்தியாவிலும் இது நடைபெறுகிறது.
ஊடகங்கள் மக்கள் மத்தியில்
பெரும் ஆதரவு பெற்ற தலைவர்
மோடியா, உதயநிதி ஸ்டாலினா என்று
இணையதளம் மூலம் வாக்கெடுப்பு நடைபெறுகிறது.

சந்திரயான் - 3 லேண்டரை படம் பிடித்த சந்திரயான் - 2:

பெங்களூரு, செப் 11 -

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முயற்சியால் (இஸ்ரோ) சந்தி ரனின் தென் துருவத்தில் சந்தி ரயான்3 விண்கலம் வெற்றிக ரமாகத் தரையிறங்கியது. இதனைச் சாதித்த முதல் நாடு என்ற பெருமையை நமது நாடு கொண்டாடி வருகிறது. விக்ரம் லேண்டரில் இருந்து வெளியேறிய பிரக்யான் ரோவர் நிலனின் மேற்பரப் பில் ஊர்ந்து சென்று ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய் வின் மூலம் நிலவில் இரும்பு, அலுமினியம், சல்பர் உள் ளிட்ட கனிமங்கள் இருப் பதை கண்டறிந்து பிரக்யான் ரோவர் உறுதி செய்தது. இதையடுத்த, 14 நாட்கள் தனது ஆய்வு பணிகளை முடித்துக் கொண்ட ரோவர் உறக்க நிலையில் உள்ளது.

இந்நிலையில், நிலவில் இருக்கும் சந்திரயான் 3ன் லேண்டரை, சந்திரயான் 2 ஆர்பிட்டர் படம் பிடித்துள்ளது. இதனை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. லேண்டரின் புதிய படமா னது, சந்திரயான் 2ன் டிஎப் எஸ்ஏஆர் என்ற ரேடர் கருவி மூலம் கடந்த 6ம் தேதி எடுக் கப்பட்டதாக இஸ்ரோ தெரி வித்துள்ளது.

ஜி 20 உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்!

புதுடெல்லி, செப். 11 -

ஜி20 அமைப்பானது அனைத்து வகையான தீவி ரவாதத்தையும், தீவிரவாத அமைப்புகளுக்கு பாது காப்பான புகலிடம் வழங் குபவர், நிதி உதவி செய்ப வர்களையும் கடுமையாக கண்டிக்கிறது. மேலும் தீவி ரவாதத்தை ஒழிக்க, நிதி மற்றும் அரசியல் ரீதியாக சர்வதேச ஒத்துழைப்பின் செயல்திறனை அதிகரிக் கும் முயற்சிகளை வலுப்ப டுத்தவும் அழைப்பு விடுக்கி றது. அணு ஆயுதம் பயன்ப டுத்துவதையோ, அணு ஆயுத் தாக்குதல் தொடர் பாக மிரட்டு வதையோ ஏற்க முடியாது

உக்ரைன் - ரஷ்யா போருக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண நடவ டிக்கை எடுக்க வேண்டும். கிரிப்டோ கரன்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கான உலகளாவிய கட்ட மைப்பை அனைத்து நாடுக ளும் உடனடியாக செயல் படுத்துவது 2030க்குள் பசுமை இல்ல வாயுக்கள் வெளியிடுதல் 43 சதவீதம் அள வுக்கு குறைக்க கவ னம் செலுத்த வேண்டும்.

செயற்கை துண்ணறி வுக்கான சர்வதேச விதிகள் வகுக்கவும் பாது காப்பான, நம்பகமான, பொறுப் புணர்வு மற்றும் அனைவ ரையும் உள்ளடக்கிய டிஜிட்டல் பொது உள்கட் டமைப்பு டி.பி.ஐ.) ஏற்ப டுத்தவும் சர்வதேச ஒத்து ழைப்பை ஊக்குவிக்க வேண்டும்.

பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர் கள் உட்பட அனைவரை யும் உள்ளடக்கிய சமத்துவ மான, உயர்தர கல்வி மற்றும் திறன் பயிற்சியை உறுதிப்படுத்த வேண்டும். கற்பவர்கள் அனைவரும் டிஜிட்டல் தொழில்நுட் பங்களைப் பயன்படுத்துவ தற்கான வாதிகளை பெற வேண்டும். உயர்தர தொழில் நுட்பம் தொழிற் கல்வி மற்றும் பயிற்சிக் கான அணுகலை விரிவு படுத்த வேண்டும்.

பொருளாதார வளர்ச் சிக்கான முடிவுகள் எடுக் கும் இடத்தில் பெண் களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். பாலின இடைவெளியைக் குறைத்து சமமான வாய்ப் புகளை வழங்கி பெண் களை ஊக்குவிக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச் சியை மேம்படுத்தவும். ஏற் றத்தாழ்வுகளைக் குறைக்க வும். மேக்ரோ பொருளா தாரம் மற்றும் நிதி ஸ்திரத் தன்மை யைப் பேணுவதற் கும் நன்கு அளவீடு. செய் யப்பட்ட பணவியல் நிதி மற்றும் கட்டமைப்புக் கொள்கைகளின் அவசி யத்தை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

பாரிஸ் பருவநிலை ஒப் பந்தத்தின்படி. உலக வெப் பமயமாதல் குறைப்பு இலக்குகளை அடைவதற் கான உலகளாவிய நடவ டிக்கை போதுமானதாக இல்லை. இதில் அனைத்து நாடுகளும் தனித்தனியாக தீவிர கவனம் செலுத்த வேண்டும். ஊழலை ஜி20 அமைப்பு ஒரு போதும் சகித்துக் கொள்ளாது. ஊழலை ஒழிக்க சட்ட ரீதி யான சர்வதேச ஒத்து ழைப்பை வலுப்படுத்த வேண்டும்.

மொராக்கோ நிலநடுக்கம்: 2,000 பேர் உயிரிழப்பு!

ரபாத், செப். 11 -

வட ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான மொராக்கோ வில் ஏற்பட்ட சத்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 2,000 பேர் உயிரிழந்துவிட்டதாக அந் நாட்டு உள்துறை தெரிவித் துள்ளது.

மேலும் ஆயிரக்கணக் கான மக்கள் காயமடைந் துள்ளனர். ஆயிரக்கணக் கான மக்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.8 ஆக பதிவாகி யுள்ளது.

மராகேஷுக்கு தென் மேற்கே 71 கிமீ (44 மைல்) தொலைவில் உள்ள ஹை அட்லஸ் மலைகளில் 18.5 கிமீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி 23:11 மணிக்கு (இந்திய நேரப்படி அதிகாலை 3:40) நிலநடுக்கம் ஏற்பட்டது. அதை தொடர்ந்து, 19 நிமி டங்களுக்குப் பிறகு 4.9 அளவில் நிலநடுக்கம் ஏற் பட்டது. மரக்கேஷ் மற்றும் தெற்கில் பல பகுதிகளில் மக்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித் துள்ளது.

இத்தாலி, கிரீஸ், துருக்கி ஆகிய பகுதிகளில்தான் பெரும்பாலான நிலநடுக்க நிகழ்வுகள் நடக்கின்றன. இந்த நிலநடுக்கம் அட்லஸ் மலைத்தொடரைத் தொடர்ந்து மேல்நோக்கித் தள்ளும் உந்துதலுடன் தொ டர்புடையதாக இருக்கும்.

வரலாற்று அடிப்படை யில், 1900ஆம் ஆண்டுக்கு முன்பு வெள்ளிக்கிழமை இரவு நடந்த நிலநடுக்கத் தில் இருந்து 500கி.மீ தொலைவில் 6.0 அளவை விடப் பெரிய நிலநடுக்கம் எதுவும் பதிவாகவில்லை.

இத்தகைய தன்மை விளைவுகளை ஏற்படுத்துகி றது. மக்களிடையே நிலந டுக்கம் பற்றிய நினைவுகள் குறைவாக இருக்கும். தயார்நிலை நடவடிக்கைக ளும் குறைவாக இருக்கும். இடிந்து விழும் கட்டடங்க ளுக்குள் மக்கள் அதிகமாக இருப்பதால், இரவில் ஏற்ப டும் நிலநடுக்கங்கள் பெரிய ளவிலான பலி எண்ணிக் கையைக் கொண்டிருக்கி றது. இந்த நிலநடுக்கம் உள் ளூர் நேரப்படி 11 : 11 மணிக்கு ஏற்பட்டது. அப் போதுபெரு ம்பாலான மக் கள் தொகை உறக்கத்தில் இருக்கும்.

அமெரிக்க நிலவியல் ஆய்வகம், மரணங்கள் மற் றும் பொருளாதார இழப்பு களின் சாத்தியமான அளவை மதிப்பிடும் மாதி ரியை வைத்துள்ளது. அதன் பகுப்பாய்வுப்படி, இந்த நிகழ்வில் பலி எண்ணிக்கை நூற்றுக்க ணக்கில் இருந்து குறைந்தது ஆயிரங்களில் இருக்கலாம் என்று அறிவு றுத்தப்படுகிறது.

நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலநடுக்கத்தால் பாதி க்கப்பட்டிருப்பதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

நிலநடுக்கத்தால் கடுமை யாக பாதிக்கப்பட்டுள்ள அட்லஸ் மலைத்தொடரில் உள்ள தொலைதூர கிரா மங்களுக்கு செல்வதில் பெரும் சிரமம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

முக்கியமாக பழைய கட் டடங்களால் ஆன கிராமங் களுக்கு மீட்புப் படையி னர் செல்ல சில நாட்கள் ஆகலாம்.பட மூலாதாரம், REUTERS

மொராக்கோ கடற்கரை யில் உள்ள கேனரி தீவுகள் மற்றும் அதன் கிழக்கு அண்டை நாடான அல்ஜீரி யாவில் உள்ள மக்கள் கூட நிலநடுக்கத்தை உணர்ந்த தாக கூறுகிறார்கள்.

அதிர்ச்சியடைந்த மக் கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி மராகே ஷின் தெருக்களில் தப்பிச் செல்லும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவியி ருக்கின்றன.

நகரின் பழமையான சுவர்களும் நிலநடுக்கத்தால் பாதி க்கப்பட்டுள்ளன.

ட்விட்டர் சமூக ஊட கத்தில் நிலநடுக்கம் தொடர்பாக உறுதிப்படுத் தாத வீடியோ கிளிப்புகள் காணப்படுகின்றன. அதில், சேதமடைந்த கட்டிடங் கள், கட்டிடங்கள் குலுங்கு வது, இடி பாடுகளுடன் கூடிய தெருக்கள் இடம் பெற்றுள்ளன.

தேனீ தெற்கு மாவட்டம் தெற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பாக உத்தம பாளையத்தில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமை தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் தெற்கு மாவட்ட மருத்துவ அணி மாவட்ட அமைப்பாளர் சேகர், மாவட்ட தலைவர் அழகர்சாமி துணை தலைவர்கள் சிவா , இளங்கோ, விஜயராமன் மற்றும் ஜெனிபர் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.